**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**அசல் வழக்கு எண். 11/2020**

**2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

வா.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு. எஸ்.முத்துராமன்,பி.எல்.,சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது. சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**PW- 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | பார்த்திபன் | த/பெ.: | அப்பாவு |
| கிராமம்: | நாஞ்சிக்கோட்டை | தாலுக்கா: | தஞ்சாவூர் |
| மதம்: | | தொழில்: | |
| வயது: | 36 | முகவரி: | 4/429 – திருவள்ளுவர் தெரு. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of **06.02.2026.**

**முதல் விசாரணை :-**

நான் வழக்கில் 3ம் வாதி ஆவேன் . வாதி தரப்பு சாட்சி 1 ஆவேன். நான் ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் கடந்த 28.01.2026ம் தேதியன்று விசாரணை செய்யப்பட்டு என் தரப்பில் 1 முதல் 13 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டிருந்தது. மேற்கொண்டு ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டி வாய்தா ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் பின்வரும் ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.14 | 26.09.2023 | அப்பாவு வாரிசு சான்றிதழ் | அசல் |
| வா.சா.ஆ.15 | 28.07.2023 | அசல் வழக்கு எண். 101/2021 தீர்ப்பாணை | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.16 | 28.07.2023 | அசல் வழக்கு எண். 101-2021 தீர்ப்புரை | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.17 | 21.11.2019 | துணை வட்டாட்சியர் வழங்கிய நிலவரித்திட்ட பதிவேடு | அசல் |
| வா.சா.ஆ.18 | 21.11.2019 | துணை வட்டாட்சியர் வழங்கிய தூய அடங்கல் | அசல் |
| வா.சா.ஆ.19 | 21.01.2020 | 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு , பதிவு தபால் ரசீதுடன் (அசல்), அஞ்சலக ஒப்புதல் அட்டை (அசல் | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.20 | 06.01.2021 | 1, 2 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு , பதிவு தபால் ரசீதுடன் | அலுவலக நகல் |

எனவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**2, 3 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை -**

2, 3 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் கோரியுள்ள பரிகாரங்கள் செல்லத்தக்கது அல்ல என்றால் - சரியல்ல. எனது கோரிக்கையை நீதிமன்ற உத்தரவின்றி பிரதிவாதி ஏற்க இயலாது என்றால் - அதுபற்றி தெரியாது. உள்ளிக்கோட்டை சார்பதிவாளர் பத்திரத்தை பதிவு செய்யும்போது

அந்த நபருக்குரிய உரிமை, ஆவணங்கள் ஆகியவற்றின் தகுதியின் அடிப்படையில் தான் பத்திரத்தை பதிவு செய்தார் என்றும் சொன்னால் - சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,

சார்பு நீதிபதி

மன்னார்குடி.